# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - கல்வியாண்டு 2009 - 2010

## தமிழ்மொழி - ஆண்டு 8

சுட்டெண்:.............................................................. நேரம்: 150 நிமிடங்கள்

**1) கீழ்வரும் வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, விடைக்கான எழுத்துக்குரிய கூட்டில் புள்ளடியிடுக.**

1. தமிழுக்கே உரிய சிறப்பான ஒலி
   அ) ஃ ஆ) ள இ) ற ஈ) ழ

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. ஐம்பெரும் காப்பியங்களில் காலத்தால் முந்தியது
   அ) குண்டலகேசி ஆ) மணிமேகலை இ) சிலப்பதிகாரம் ஈ) வளையாபதி

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. எனக்கு ஒரு நூல் வேண்டும். இச்சொல்லியத்தில் இடம் பெற்றுள்ள வேற்றுமை ஏற்ற சொல்.
   அ) நூல் ஆ) எனக்கு இ) வேண்டும் ஈ) ஒரு

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. பண்டாரவன்னியனுடன் தொடர்புடைய ஊர்களில் ஒன்று
   அ) யாழ்ப்பாணம் ஆ) முள்ளியவளை இ) கண்டி ஈ) நல்லூர்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. தமிழ் இலக்கண நூல்களுள் காலத்தால் முந்தியது
   அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல் இ) சதுரகராதி ஈ) நிகண்டு

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. செந்தமிழ் என்பதைப் பகுத்தால் வருவது
   அ) செந்+தமிழ் ஆ) செம்மை+தமிழ் இ) செ+தமிழ் ஈ) செம்+தமிழ்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. கவிஞர் உருத்திரமூர்த்தி அவர்கள் எழுதிய பாடல்

அ) பொங்கல் விழா ஆ) காட்டு மல்லிகை
இ) முற்றத்து மல்லிகை ஈ) தாயின் தாலாட்டு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. இவரை ஆசுகவி என்பர்

அ) பாரதிதாசன் ஆ) காளமேகம் இ) உருத்திரமூர்த்தி ஈ) கம்பன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. யாழ்ப்பாணம் வென்றது. இங்கு இடம் பெற்றுள்ள ஆகுபெயர்

அ) காலவாகுபெயர் ஆ) இடவாகுபெயர்
இ) தொழிலாகுபெயர் ஈ) பொருளாகுபெயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. அறிஞர்கள் கூடி வாதிடும் இடம்

அ) பட்டிமன்றம் ஆ) மணிமண்டபம் இ) அறமன்றம் ஈ) கலாமன்றம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. நாளை பள்ளிக்கு போவேன். இச்சொல்லியத்தில் வந்துள்ள தோன்றா எழுவாய்

அ) நீ ஆ) நீங்கள் இ) நான் ஈ) நாங்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. வன்னியில் ஒல்லாந்தரையும் ஆங்கிலேயரையும் எதிர்த்து வீரப்போர் புரிந்தவன்

அ) விக்கிரமசிங்கன் ஆ) காக்கைவன்னியன்
இ) சங்கிலியன் ஈ) பண்டாரவண்ணியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. ஓடிய என்பது

அ) வினைமுற்று ஆ) வினையெச்சம் இ) பெயரெச்சம் ஈ) பெயர்ச்சொல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. அவன் நாள் தோறும் படம் பார்ப்பான். இதில் தோறும் என்பது.

அ) இடைச்சொல் ஆ) பெயர்ச்சொல் இ) உரிச்சொல் ஈ) வினைச்சொல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. 'முப்பேரும் பெற்றாயே' என்றுகாள மேகம் சொன்னது

அ) பாலை ஆ) நீரை இ) மோரை ஈ) காரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. சூடினான் இதில் வந்துள்ள இறந்தகால இடைநிலை

அ) ன் ஆ) ந் இ) இன் ஈ) ண்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. செல்லத்தில் திளைத்து செருக்கொடு மலர்ந்து நிற்பது

அ) முல்லை ஆ) காட்டுமல்லிகை இ) தாமரை ஈ) செம்பங்கி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. மயில் அகவும். அது போல ஆந்தை

அ) பிளிறும் ஆ) அலறும் இ) கத்தும் ஈ) பேசும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. காத்தான் தாவளத்தில் அரிசி உலையில் இட

அ) வெள்ளியெழும் ஆ) கதிரவன் காலிக்கும்

இ) ஊரடங்கும் ஈ) கதிரவன் மறையும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. ஆறாம் வேற்றுமை உருபு

அ) இல் ஆ) ஐ இ) கண் ஈ) அது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. 'நீ கடைக்குப் போ' என்று அம்மா சொன்னார். இச்சொல்லியம்

அ) தனிச்சொல்லியம் ஆ) தொடர்ச்சொல்லியம்

இ) கலப்புச்சொல்லியம் ஈ) கூற்றுச்சொல்லியம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. அறுபது ஆண்டு முடிவில் எடுக்கப்படும் விழா

அ) பொன்விழா ஆ) வைரவிழா இ) பவளவிழா ஈ) வெள்ளிவிழா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. மரத்தில் ஒரேயொரு கனி காய்த்திருந்தது. அது

அ) செந்நெல்லி ஆ) சிறுநெல்லி

இ) கருநெல்லி ஈ) பெருநெல்லி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. ஒருவரை விளிக்கப்படும் பொழுது தோன்றுவது

அ) 3ம் வேற்றுமை ஆ) 7ம் வேற்றுமை இ) 8ம் வேற்றுமை ஈ) எழுவாய் வேற்றுமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. தமிழ் மொழியில் உள்ள முதல் எழுத்துகள்

அ) உயிரெழுத்துகளும் ஆய்தவெழுத்தும்

ஆ) மெய்யெழுத்துகளும் உயிர்மெய்யெழுகளும்

இ) ஆய்தவெழுத்தும் மெய்யெழுத்துகளும்

ஈ) உயிரெழுத்துகளும் மெய்யெழுத்துகளும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. கேளிர் என்ற சொல் குறிப்பது

அ) கேளுங்கள்  ஆ) பகைவர்  இ) உறவினர்  ஈ) அயலவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. குபுகுபு என்பது

அ) அடுக்குத்தொடர்  ஆ) இணைமொழி

இ) இரட்டைக்கிளவி  ஈ) அடுக்கிடுக்குத்தொடர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. இறந்தகால இடைநிலைகள்

அ) த்,ட்,ற்,ந்  ஆ) த்,ட்,ற்,இன்,ன்  இ) த்,ட்,ம்,ப்  ஈ) த்,ற்,ப்,வ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. தமிழரின் நன்றி உணர்ச்சியைக் காட்டும் விழா

அ) ஆடிப்பிறப்பு  ஆ) புத்தாண்டு  இ) தைப்பொங்கல்  ஈ) தீபாவளி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. முகமதி என்பது

அ) உவமைஅணி  ஆ) உருவகஅணி

இ) அன்மொழித்தொகை  ஈ) ஆகுபெயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30

2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

உலகின் அதிகமான நாடுகளில் தேசியப்பறவைகளாக பறப்புத்திறன் குறைந்த பறவைகளே இருக்கின்றன. பறப்புத்திறன் குறைந்த பறவைகளே ஒரு மண்ணுக்குரிய மரபுரிமைச் சொத்துகளாகின்றன. நமது தாயகத்தில் காடை, கௌதாரி, செண்பகம், புலினி, காட்டுக்கோழி, மயில் என்பன பறப்புத்திறன் குறைந்த பறவைகள். இவற்றில் மயில் இந்தியாவின் தேசியப்பறவையாக உள்ளது. காட்டுக்கோழி சிறிலங்காவின் தேசியப் பறவையாக உள்ளது. செண்பகம் தமிழீழத்தின் தேசியப்பறவையாகும். காடை, கௌதாரி என்பன உலகின் பலபகுதிகளிலும் உள்ளன. நமது தாயகத்திலும் இந்தியா, சீனா ஆகிய நாடுகளிலும் செண்பகத்தின் இனங்கள் வாழ்கின்றன. கறுப்புநிற உடலையும் காவிநிறச் செட்டைகளையும் கொண்ட செண்பகம் காகத்தை விட சற்றுப்பெரியது. நமது சூழலில் இவை தத்தித் தத்தித் திரிவதை நாம் காணலாம். இது உலர்வலயப் பகுதிகளில் தான் அதிகமாக உள்ளது. பற்றைகள், சிறு மரங்களின் கீழ்ப்பகுதிகள் இதன் வாழிடங்கள் ஆகும்.

1. ஒரு மண்ணுக்குரிய மரபுரிமைச் சொத்துகளாகும் பறவைகளுக்குரிய சிறப்புப் பண்பு யாது?

_______________________________________________

_______________________________________________

2. எமது தாயகத்தின் தேசியப் பறவை எது?

_______________________________________________

3. பறப்புத்திறன் குறைந்த பறவைகள் எவை?

_______________________________________________

_______________________________________________

4. செண்பகத்தின் தோற்றம் எத்தகையது?

_______________________________________________

_______________________________________________

5. செண்பகம் எவ்விடங்களில் வாழ்கிறது?

_______________________________________________

_______________________________________________

(புள்ளிகள் 10)

3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்து வினாக்களுக்கு முழு விடை தருக.

1. தொல்காப்பியத்தினை எப்படிக் கூறிப் பாராட்டுவர்?

2. பண்டாரவன்னியனுடன் தொடர்புடைய ஊர்களின் பெயர்கள் யாவை?

3. 'உன்னைப்போல் எனக்கும் வாழ்வில் உலகத்தார் உயர்வுகாணார்' என்ற வரியில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது என்ன?

4. 'சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா' என்ற வரியினை விளக்குக.

5. கதிரவன் எவ்வகையில் எமக்கு உதவுகிறான்?

6. 'அதியமான் நெடுமான் அஞ்சி' எத்தகைய தன்மை கொண்டவன்?

7. தமிழ் மொழியின் சிறப்பைக் குறிக்கும் பெயர்கள் யாவை?

(புள்ளிகள் 15)

4) **இலக்கண / மொழியியல் வினாக்களுக்கு முழுவிடை தருக.**

**1.** சொல்லிய உறுப்புகள் நான்கும் இடம் பெறுமாறு ஒரு சொல்லியம் எழுதுக.

______________________________

______________________________

2. உயிரிகளின் ஒலிக்குரிய பெயர்களை எழுதுக

1. பாம்பு ____________ 4. புலி ____________

2. கிளி ____________ 5. குதிரை ____________

3. யானை ____________ 6. மயில் ____________

3. தத்தம் பொருளை உணர்த்தும் இடைச்சொற்களை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

______________________________

______________________________

______________________________

4. 5ம் வேற்றுமை உருபையும் அதன் நான்கு பொருள்களையும் குறிப்பிடுக.

______________________________

______________________________

5. தரப்பட்டுள்ள சொற்களின் புணர்ச்சியைப் பிரித்து எழுதுக.

1. சிலப்பதிகாரம் ____________ 4. பைந்தமிழ் ____________

2. முட்செடி ____________ 5. மரவேர் ____________

3. மாங்கன்று ____________ 6. திண்தோள் ____________

(புள்ளிகள் 15)

5) பாடலைப்படித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

வன்னி மண்ணில் கூடுகட்டி வாழ்ந்திருந்தோம் நாங்கள்
வகைவகையாய்க்கனிகள் உண்டு களித்திருந்தோம் நாளும்
மண்ணினது மைந்தர்களைப்பார்த்து மகிழ்ந்திருந்தோம்
கண்ணைப்போல் தம்மண்ணை காப்பதையும் பார்த்தோம்
எங்கிருந்தோ போர் அரக்கன் சூழ்ந்து கொண்டான் எம்மை
எங்கள் முன்னே மக்கள் எல்லாம் இறந்தொழிந்தார் உண்மை
வீடுகளை அவர் இழந்தார் கூடுகளை நாம் இழந்தோம்
காடுகளை நோக்கி நாம் பறக்க முடிவு எடுத்தோம்
இறக்கைகள் இருந்ததினால் இடம் பெயர்ந்தோம் நாங்கள்
இரக்கமற்ற அரக்கர்களால் எஞ்சியவர் புதையுண்டார் மண்ணில்
காட்டுக்குள்ளே வந்தாலும் எங்கள் கலகலப்பை இழந்தோம்
கணப் பொழுதில் ஏதோ ஒலி கலக்கத்துடன் பார்த்தோம்
மகிழ்ச்சியுடன் சிறகடித்தோம் மறந்துவிட்டோம் எல்லாம்
மண்ணின் மைந்தர்களை மறுபடியும் பார்த்துவிட்டோம் மெல்ல
உங்களுக்கு மட்டுமல்ல அவர்கள் எங்களுக்கும்காவல்
எங்களுக்கும் இவர்களே இனிய வேடந்தாங்கல்.

1. பறவைகள் மறுபடியும் யாரைப் பார்த்தன?

________________________________________

________________________________________

2. பறவைகள் போரினால் எவற்றை இழந்தன?

________________________________________

________________________________________

3. யாரால் மக்கள் மண்ணில் புதைக்கப்பட்டனர்?

________________________________________

________________________________________

4. மண்ணின் மைந்தர்கள் கண்ணைப் போல் எதைப் பாதுகாத்தனர்?

________________________________________

________________________________________

5. இப்பாடலில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது என்ன?

________________________________________

________________________________________

(புள்ளிகள் 10)

6. பந்தியை வாசித்து உமது வாழிட மொழியில் மாற்றி எழுதுக.

நாம் எமது உடல் நலத்தைப்பேண வேண்டும். உடல் நலமாக இருந்தால் தான் நாம் எமது கடமைகளை ஒழுங்காகச் செய்ய முடியும். எனவே, நாம் உடலைப் பேண சத்துள்ள உணவுகளை உண்ண வேண்டும். நாம் உண்ணும் உணவுகள் நிறை உணவுகளாக அமைய வேண்டும். உணவில் பழம், காய், கறிகள், கீரைகள் போன்றவற்றைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். இத்தகைய உணவு உடல் வளர்ச்சிக்கும் உறுப்புகளின் செயற்பாட்டுக்கும் துணைபுரியும். அது நோய்களிருந்து உடலைக் காக்கும். அத்துடன் நோயற்ற வாழ்வை வாழ்வதற்கு ஒவ்வொரு நாளும் உடற்பயிற்சி செய்தல் வேண்டும்.

(புள்ளிகள்05)

7. கீழ்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து, நூற்றைம்பது சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

**பண்டாரவன்னியன்**

அல்லது

**'தமிழுக்குத் தந்தகனி' என்ற பாடலை உமது உரைநடையில் எழுதுக.**

அல்லது

**தாய் மொழியும் நாமும்**

தாய்மொழி - நாம் பேசும் மொழி
தாய் மொழியின் அவசியம்
தாய்நாட்டிற்கும் தாய் மொழிக்கும் உள்ள தொடர்பு
தாய்மொழியைப் போணாவிடின் ஏற்படும் தீமைகள்
தாய்மொழியைப் பேணவேண்டியதன் அவசியம்

(புள்ளிகள் 15)